**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 552/2025**

**Prosecution witness : அ.சா.4** **Date : 19.02.2026.**

| | |
|---|---|
| **Name : அழகுதுரை** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused absent. Petition filed and allowed )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது மேட்டூர் மதுவிலக்கு அமலாக்கபிரிவு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 16.10.2019–ம் தேதி கருமலைக்கூடல் காவல்நிலையத்தில் நான் நிலையப் பொறுப்பில் இருந்த போது, பத்மவதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப **நி.கு.எண்.202/2019 u/Sec. 294(பி), 324, 506(2) IPC** ஆக வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 3** ஆகும்.

3. பிறகு நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 16.10.2019 ம் தேதி மதியம் 12.15 மணிக்கு சம்பவ இடம் தங்கமாபுரிபட்டினம் வாதி நிலத்தின் அருகே பின்புறம் சென்று சாட்சிகள் மல்லிகா மற்றும் மாது ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 4** மற்றும் **அ.சா.ஆ 5** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் பத்மாவதி, தனசேகர், கௌரி, மாது, மல்லிகா மருத்துவர் கனிமொழி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயமடைந்த பத்மாவதி என்பவருக்கு சிகிச்சை அளித்த

மருத்துவர் கனிமொழி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6 ஆகும்.**

5) கடந்த 16.10.2019 ம் தேதி மதியம் 1.15 மணிக்கு சுமார் 55 செ.மீ நீளமும், 5 மிமீ விட்டம் கொண்ட விறகு கட்டை ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜர் வாயிலாக சாட்சிகள் மாது மற்றும் மல்லிகா ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.7** ஆகும். கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்தை படிவம் 95ன் வாயிலாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 95

**அ .சா.ஆ.8** ஆகும்.

5. இவ்வழக்கின் எதிரிகள் கடந்த 16.05.2019 ம் தேதி ஆகியோர் கைது செய்யப்பட்டு தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 3.11.2019–ம் தேதி **நி.கு.எண்.202/2019 u/Sec. 294(பி), 324, 506(2) IPC** ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். இவ்வழக்கில் சாட்சி 3 மாது என்பவர் இறந்து போய்விட்டார். இறப்பு சான்றிதழ் **அ.சா.ஆ.9** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

7. வழக்கு சம்பவத்திற்கு முன்பாகவே விஜயா அ.சா.1க்கு எதிராக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தார் என்றால் தெரியவில்லை. புகார் கொடுத்திருந்தார் என்றும் அந்த புகாருக்கு நான் தான் விசாரணை நடத்தினேன் என்றும் புகார் மனு ரசீது ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி கொடுத்த புகார் மீது விசாரணையின் போது அ.சா.1யை வீட்டிலிருந்து வரவழைத்து இவ்வழக்கு புகாரினை பெற்று எதிரிகள் மீது பொய்யாக இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8. வழக்கு சம்பவ தேதி, புகார் கொடுத்த தேதி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தேதி, பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்த தேதி,

அ.சா.1, சாட்சி தனசேகரி, சாட்சி கௌரி, சாட்சி மாது, சாட்சி மல்லிகா, ஆகியோரை விசாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் தேதி 16.10.2019ம் தேதி என்றால் சரிதான்.

9) இவ்வழக்கின் விபத்து பதிவேட்டில் விறகு கட்டையாலோ, மரக்கட்டையாலோ தாக்கியதாக மருத்துவ குறிப்பில் இல்லை என்றால் சரிதான். அ.சா.1யை மருத்துவமனையில் யார் சேர்த்தது என விபத்து பதிவேட்டில் குறிப்பிடவில்லை என்றால் காவல் நிலைய மருத்துவ குறிப்பாணையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் விபத்து பதிவேட்டில் அ.சா.1ன் வலது பக்க நெஞ்சு, வலது பக்க முன் கை ஆகிய இடங்களில் தாக்கியதாக எதுவும் குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். வலது பக்க தோள்பட்டையில் வலி இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

10) எதிரிகளுக்கும் அ.சா.1க்கும் ஏற்கனவே நிலம் சம்மந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் மனு ஏற்பு ரசீதுகள் கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் வழங்கப்பட்டது என்றால் சரிதான். அவை **எ.ம.சா.ஆ.2 மற்றும் எ.ம.சா.ஆ.3** ஆகும். அவை இரண்டும் நான் விசாரிக்கவில்லை. பணிமாறுதலில் சென்றுவிட்டேன்.

11) எதிரிகள் அ.சா.1ன் மாமாவிடமிருந்து நிலம் விலைக்குவாங்கி வீடு கட்டி குடியிருந்து வந்த விவரம் என் விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் வாக்குமூலத்தில் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. சம்பவ தேதியில் எதிரிகள் வீடு கட்டியதை அ.சா.1 தடுத்ததால் தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றாலும், அந்த புகாரை சரிவர விசாரிக்காமல் அ.சா.1 இடம் பொய் புகார் பெற்று தவறுதலாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளை கைது செய்த போது நானும், தலைமை காவலர் முத்துசாமியும் தாக்கியதில் 2ம் எதிரிக்கு இடது காது சவ்வு சேதமடைந்து விட்டது என்றாலும், அது சம்மந்தமாக மருத்துவ சிகிச்சை எடுத்துள்ளார் என்றாலும் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையானது மேட்டூர் காவல் துணை கண்காணிப்பாளரால் வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

12) அ.சா.1 சொல்வது போல் சொன்ன தேதியில், சொன்ன இடத்தில், சொன்ன விதத்தில் அது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் 1ம் எதிரி கொடுத்த புகாரினை சரிவர விசாரணை செய்யாமல் அ.சா.1 இடம் பொய் புகார் பெற்று இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் இவ்வழக்கு சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவிதமான சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.02.20 11:19:00 +0530

Judicial Magistrate No.II,
Mettur.